



# சக்கர வியூகம்

SAKKRA VIYUGAM

புலனாய்வு நாளிதழ்

"தேமதுரத் தமிழோசை உலகமெலாம்"



FLY TOWARDS
DIGITAL INNOVATION

Services / சேவைகள்

DIGITAL MARKETING
WEB DEVELOPMENT
SOFTWARE DEVELOPMENT

9080999823
7695883647

வடக்கு ரத வீதி,சங்கரன்கோவில்



Website: www.sakkraviyugam.com PRGI:TNTAM/25/A1018 Email: sakkraviyugam@gmail.com

| VOLUME : 01 | ISSUE: 295 | 18.04.2026 | SATURDAY | CHITHIRAI: 5 | PRICE : RS.5/- |
|---|---|---|---|---|---|
| மலர் : 01 | இதழ் : 295 | 18.04.2026 | சனிக்கிழமை | சித்திரை : 5 | விலை : ரூ.5/- |


## பெண்களை பெருமைப்படுத்த

# "எம்பிக்களுக்கு சிறந்த வாய்ப்பு"

## பிரதமர் மோடி



புதுடில்லி : ஏப்.18-

''நாட்டின் பெண்கள் அதிகாரத்திற்கும், அவர்களை பெருமைப்படுத்தவும், இதுவே சிறந்த வாய்ப்பு. இந்த புதிய வாய்ப்புகளை தவற விடாதீர்கள்,'' என பிரதமர் மோடி கூறியுள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்ட அறிக்கையில் கூறியுள்ளதாவது: மசோதாக்கள் குறித்து பரப்பப்பட்டதவறான புரிதல்களுக்கு ஏற்ற பதில் அளிக்கப்பட்டது. சந்தேகங்களுக்கு விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது. எதிர்ப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் இருந்த சிக்கல்கள் தீர்க்கப்பட்டுள்ளன. கடந்த நான்கு தசாப்தங்களாக, நாட்டில் பெண்களுக்கான இட ஒதுக்கீடு எனும் விவகாரத்தை சுற்றி பெருமளவில் அரசியல் விளையாட்டுகள் அரங்கேறி வந்துள்ளன. நாட்டின் மக்கள் தொகையில் சரிபாதியாக திகழும் பெண்களுக்கு, அவர்களுக்கான உரிமைகள் நிச்சயமாக கிடைக்க வேண்டிய தருணம் இது.

நாடு சுதந்திரம் பெற்று பலஆண்டுகள் கடந்துவிட்ட போதும், முடிவெடுக்கும் நடவடிக்கைகளில் இந்திய பெண்களுக்கு மிகக் குறைந்த அளவிலேயே பிரதிநிதித்துவம் இருப்பது ஏற்புடையதல்ல. லோக்சபாவில் நடக்கும் ஓட்டெடுப்பில், உரிய முறையில் ஆலோசித்து முழுமையான உணர்வுப்பூர்வமான அக்கறையுடன் ஒரு முடிவை எடுத்து பெண்களுக்கான இட ஒதுக்கீட்டுக்கு ஆதரவாக ஓட்டுப்போட வேண்டும்.

பெண்கள் சக்தியின் உணர்வுகளை புண்படுத்தக்கூடிய எதையும் எம்பிக்கள் செய்யக்கூடாது. நாட்டின் கோடிக்கணக்கான பெண்களின் கண்கள் நம் அனைவர் மீதும்,நமது நோக்கங்கள் மீதும் பதிந்துள்ளன. தங்களின் தாயார், சகோதரிகள், மகள்கள், மனைவி ஆகியோரை மனதில் வைத்து உங்கள் மனசாட்சியிடம் கேளுங்கள்.

நாட்டின் பெண்கள் அதிகாரத்திற்கும், அவர்களை பெருமைப்படுத்தவும், இதுவே சிறந்த வாய்ப்பு. இந்த புதிய வாய்ப்புகளை தவற விடாதீர்கள். ஒரு மித்த ஆதரவுடன் இம்மசோதா நிறைவேற்றப்பட வேண்டும். இதன் மூலம் பெண்கள் இன்னும் அதிகாரம் படைத்தவர்களாக மாறுவார்கள். நாட்டின் ஜனநாயகம் இன்னும் அதிகாரம் பெறும். அனைவரும் இணைந்து வரலாற்றை படைப்போம். நாட்டின் மக்கள் தொகையில் பாதி அளவு இருக்கும் பெண்களுக்கு உரிய அதிகாரம் கிடைப்பதை உறுதி செய்வோம் இவ்வாறு அந்த அறிக்கையில் பிரதமர் கூறியுள்ளார்.

## தேசிய ஜனநாயக கூட்டணி திமுக இடையேதான் போட்டி: நயினார் நாகேந்திரன்



ஈரோடு: ஏப்.18-

"தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் தேசிய ஜனநாயக கூட்டணிக்கும், திமுகவுக்கும் இடையேதான் போட்டி" என்று பாஜக மாநில தலைவர் நயினார் நாகேந்திரன் தெரிவித்தார்.

ஈரோட்டில் செய்தியாளர்களிடம் அவர் கூறியது: "கோவையில் நாளை நடைபெறும் கூட்டத்தில் பிரதமர் மோடி கலந்து கொண்டு தேசிய ஜனநாயக கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து பேச உள்ளார். 19ம் தேதி மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா ஈரோடு மாவட்டம் மொடக்குறிச்சி சட்டப்பேரவைத் தொகுதி வேட்பாளர் கிருத்திகா சிவக்குமாரை ஆதரித்து சிவகிரியில் பிரச்சாரம் மேற்கொள்ள உள்ளார். மேலும் சிவகிரியில் 'ரோடு ஷோ' செல்ல உள்ளார்.

மக்களவையில் பெண்களின் 33 சதவீதம் இடஒதுக்கீடு குறித்து மறு வரையறை திட்டத்தை மத்திய அரசு தாக்கல் செய்தது. அதே நேரத்தில் ஆண்களுக்கான இட ஒதுக்கீடு குறைந்து விடாது. ஒவ்வொரு மாநிலத்திலும் 50 சதவீதம் கொடுப்பது மூலம் மக்களவையில் 850 இடங்கள் கொண்டு வரப்படும் இதற்கு தமிழக முதல்வர் எதிர்ப்பு போராட்டம் செய்கிறார். கடந்த 5 ஆண்டுகளாக ஆட்சியில் மக்களுக்கான திட்டங்களை அவர் செய்யவில்லை.

இந்தியா சுதந்திரம் பெற்று 75 ஆண்டுகாலம் ஆகிவிட்டது. வளர்ந்து வரக்கூடிய மாநிலத்துக்கும், பெண்களுக்கும் இடம் ஒதுக்கீடு கொடுக்க வேண்டியது காலத்தின் கட்டாயம்.

மத்திய அரசோடு மோதல் போக்கு இல்லாமல் மக்களுக்கான திட்டங்களை பெற்று தருவதில் முதல்வர் ஸ்டாலின் தவறி விட்டார். துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலினை முதல்வராக்குவது தான் அவரது குறிக்கோள். இந்த தேர்தலில் தேசிய ஜனநாயக கூட்டணிக்கும், திமுகவுக்கும் இடையே தான் போட்டி" என்றார்.





## "பிரதமரை மந்திரவாதி என்பதா?" ராகுல் காந்தி மன்னிப்பு கோர கிரண் ரிஜிஜு வலியுறுத்தல்

புதுடெல்லி: ஏப்.18-

பிரதமரை மந்திரவாதி என குறிப்பிடுவதா என ராகுல் காந்தியின் பேச்சுக்கு பாஜகவினர் கடும் எதிர்ப்பு தெரிவித்தனர்.

மகளிர் இட ஒதுக்கீடு தொடர்பான விவாதத்தில் பங்கேற்று உரையாற்றிய மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி, பிரதமரை மந்திரவாதி என குறிப்பிட்டுப் பேசினார்.

"இந்த மசோதா நிறைவேறாது என்பது பாஜகவுக்கு தெரியும். அவர்கள் முட்டாள்கள் அல்ல. எதிர்க்கட்சிகள் இந்த அளவுக்கு கடுமையாக இதை எதிர்ப்பதால் இது நிறைவேறாது என்பதை அவர்கள் நன்கு அறிவார்கள்.

ஆளும் கட்சியின் இந்த முயற்சிக்கு முக்கிய காரணம் ஒரு மந்திரவாதி. அந்த மந்திரவாதி நமது நாட்டின் தேர்தல் வரைபடத்தை மாற்ற விரும்புகிறார். பெண்களுக்கு ஆதரவானவர் என தன்னை காட்டிக்கொள்ள விரும்புகிறார்.

அந்த மந்திரவாதிக்கும் ஒரு தொழிலதிபருக்கும் இடையே ஒரு கூட்டணி இருப்பதை அனைவரும் அறிவர். பாலாகோட் தாக்குதல், பணமதிப்பிழப்பு நடவடிக்கை, சிந்தூர் விவகாரம் ஆகியவற்றின் பின்னணியில் இருந்த அந்த மந்திரவாதி தற்போது திடீரென கையும் களவுமாக பிடிபட்டுள்ளார்" என ராகுல் காந்தி குறிப்பிட்டார்.

அவரது இந்த கருத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து பாஜக எம்பிக்கள் அமளியில் ஈடுபட்டனர். அப்போது பேசிய பாஜக எம்பியும் மத்திய அமைச்சருமான கிரண் ரிஜிஜு, "மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு பிரதமரை மந்திரவாதி என குறிப்பிடுவது தரம் தாழ்ந்த பேச்சு. மக்களவை எதிர்க்கட்சித் தலைவராக இருப்பவர் இவ்வாறு பேசுவதை அனுமதிக்க முடியாது.

பிரதமரின் கண்ணியம் காக்கப்பட வேண்டும். தனது தரம் தாழ்ந்த பேச்சுக்காக ராகுல் காந்தி மன்னிப்பு கோர வேண்டும்" என வலியுறுத்தினார்.

பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங் பேசும்போது, "ராகுல் காந்தி கண்ணியத்துடன் பேச வேண்டும். நாட்டு மக்களின் ஆதரவைப் பெற்றுள்ள ஒரு பிரதமரை தரம் தாழ்ந்து கிண்டல் செய்வது அடாவடித்தனமானது. இப்படி பேசுவதை ஒருபோதும் ஏற்க முடியாது" என கூறினார்.

ராகுல் காந்தி கண்ணியத்துடன் பேச வேண்டும் என்றும் இல்லாவிட்டால் தொடர்ந்து பேச அனுமதிக்க முடியாது என்றும் சபாநாயகர் ஓம் பிர்லா எச்சரித்தார்.

## சவால் விடும் பழனிவேல் தியாகராஜன் கடும் போட்டி கொடுக்கும் சுந்தர்.சி





மதுரை: ஏப்.18-

மதுரை மத்திய தொகுதியில் தொடர்ந்து இருமுறை சிரமமில்லாமல் வெற்றி பெற்ற திமுக வேட்பாளர் பழனிவேல் தியாகராஜனுக்கு, இந்த முறை அதிமுக கூட்டணி வேட்பாளர் சுந்தர்.சி தேர்தல் களத்தில் கடும் போட்டியை கொடுத்து வருகிறார்.

மதுரை மத்திய தொகுதியில் அதிமுக கூட்டணி சார்பில் புதிய நீதிக் கட்சி வேட்பாளராக சுந்தர்.சி அறிவிக்கப்பட்டு மதுரையில் வந்து இறங்கியதும், மீனாட்சி அம்மன் கோயிலுக்கு சென்று வழிபட்டுவிட்டு பிரச்சாரத்தை தொடங்கினார். அப்போது அவர், "நான் மதுரை மீனாட்சி அம்மன் கோயிலுக்குச் சென்றிருந்தேன். கோயில் பகுதியை பார்க்கும்போது எனக்கு ரொம்ப கஷ்டமாக இருந்தது.

எவ்வளவு பெரிய கட்டமைப்பு வசதிகளை கொண்டு வந்திருக்கலாம். ஆனால், ஆட்சியில் அதிகாரத்தில் இருந்தவர்கள் அதை பற்றியெல்லாம் கவலைப்பட்டதாக தெரியவில்லை. நான் 20 ஆண்டுகளுக்கு முன் வாராணசிக்கு சென்றுள்ளேன். அப்போது இருந்த வாராணசியையும், இப்போது மோடி வந்தபிறகு இருக்கும் வாராணசிக்கும் எவ்வளவு வித்தியாசம் உள்ளது'' என்று கூறி கொளுத்திப் போட்டார்.

மீனாட்சி அம்மன் கோயில் அறங்காவலர் குழுத் தலைவராக, பழனிவேல் தியாக ராஜனின் தாயார் ருக்மணி உள்ளார். மேலும், மீனாட்சி அம்மன் கோயில் அவரது மத்திய தொகுதிக்குள் வருகிறது. அதனால், அதிருப்தியடைந்த பழனிவேல் தியாகராஜன், ''சுந்தர்.சியை சினிமா சங்கி, வெளியூரில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட வேட்பாளர், 11ம் வகுப்பு வரை மட்டுமே படித்தவர் என்பதால் அவருக்கு எதையும் புரிந்துகொள்ளும் அறிவு இல்லை, தொகுதி வரலாறு தெரியாதவர்'' என்றெல்லாம் விமர்சித்தார்.

பின்னர் ''ஒவ்வொரு 500 அடிக்கும் ஒரு இடத்தில் என்னுடைய திட்டங்கள் உள்ளன, எழுதி வைத்துக் கொள்ளுங்கள், மே4ம் தேதி சுந்தர்.சி ஷூட்டிங் சென்று விடுவார்'' என சவால் விடுத்தார். பதிலுக்கு சுந்தர்.சியும், குஷ்புவும், பழனிவேல் தியாகராஜனை, ''தலைக்கணம் கொண்டவர், அவரது அதிகார திமிரால்தான் நிதி அமைச்சர் பதவியில் இருந்து பதவியிறக்கம் செய்யப்பட்டார், நாங்கள் படிக்காதவர்கள்தான், ஆனால் எங்கள் வளர்ப்பு சரியாக இருப்பதால் எங்கள் அப்பா, அம்மா பெயரை காப்பாற்றுகிறோம், நாங்கள் இறக்குமதி வேட்பாளர் என்றால், கனிமொழி, மு.க.ஸ்டாலின், அவர்கள் சொந்த தொகுதியிலா போட்டியிடுகிறார்கள்? அவர்களை பார்த்து இந்த கேள்வியை கேட்பாரா? தோல்வி பீதியில் தரமில்லாமல் பேசுகிறார்'' என்று விமர்சனம் செய்தனர்.

செய்தியாளர்கள் சந்திப்பு, பிரச்சாரத்தில் மட்டுமல்லாது, சமூக வலைதளங்களிலும் இரு தரப்பினரும் மோதிக் கொண்டனர். சுந்தர்.சிக்கு ஆதரவாக மு.க.அழகிரி ஆதரவாளர்கள் பி.எம்.மன்னன், எஸ்ஸார் கோபி தலைமையில் அதிமுகவினரும், பழனிவேல் தியாகராஜனுக்கு ஆதரவாக திமுக தலைமை அமைத்த தேர்தல் பணிக்குழுவினரும் தேர்தல் களத்தில் மும்முரமாக பணியாற்றி வருகின்றனர்.

தவெக வேட்பாளர் மதார் பதூருதீன், நாம் தமிழர் வேட்பாளர் அப்துல் ஹக்கீம் ஆகியோர் மத்திய தொகுதியில் சத்தமில்லாமல் தங்கள் பாணியில் பிரச்சாரம் செய்து வருகின்றனர். அவர்களும் இந்த தொகுதியில் கணிசமான வாக்குகளை பெற வாய்ப்புள்ளதாக தெரிகிறது. ஆனால், பழனிவேல் தியாகராஜனுக்கும், சுந்தர்.சிக்கும் இடையேதான் வெற்றிக்கான போட்டி உள்ளதாக கூறப்படுகிறது.

மத்திய தொகுதியை தவிர்த்த உதயநிதி பழனிவேல் தியாகராஜனுக்கு ஆதரவாக கனிமொழி, ப.சிதம்பரம், பழநெடுமாறன், தமிழச்சி தங்கபாண்டியன் போன்றோர் பிரச்சாரம் செய்துள்ளனர். சுந்தர்.சிக்கு ஆதரவாக பழனிசாமி, அண்ணாமலை, குஷ்பு, ஏ.சி.சண்முகம், காளியம்மாள் உள்ளிட்டோர் பிரச்சாரம் செய்துள்ளனர். மதுரை மாவட்டத்தில் நேற்று திமுக வேட்பாளர்கள் பி.மூர்த்தி, கோ.தளபதி, மணிமாறன், வெங்கடேசன் ஆகியோரை ஆதரித்து துணை முதல்வர் உதயநிதி பிரச்சாரம் செய்த நிலையில், அவர் மத்திய தொகுதிக்கு வராமல் புறக்கணித்து சென்றுள்ளார்.

முதல்வரின் மருமகன் சபரீசன், பழனிவேல் தியாகராஜனுக்காக மாநகர திமுக நிர்வாகிகளை தேர்தல் பணியில் முடுக்கிவிடும் நிலையில், உதயநிதி, பழனிவேல் தியாகராஜனுக்காக பிரச்சாரம் செய்யாமல் தவிர்த்தது பேசுபொருளாகியுள்ளது. இது குறித்து திமுகவினரிடம் கேட்டபோது, உதயநிதிக்கு போதுமான நேரம் இல்லாததால், குறிப்பிட்ட தொகுதிகளில் மட்டும் பிரச்சாரம் செய்து சென்றுள்ளார். மற்றபடி இதில் ஒன்றுமில்லை, என்றனர்.


விளம்பரம் மற்றும் செய்திகள்
தொடர்புக்கு : 88705 00000

# கரூரில் செந்தில் பாலாஜி ஆதரவாளர்கள் வீடுகளில் வருமான வரித்துறை சோதனை

கரூர், ஏப்.18-

கரூரில் முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜியின் ஆதரவாளரும், பிரபல ஒப்பந்ததாரருமான எம்.சி சங்கரின் வீடு மற்றும் அலுவலகங்களில் வருமான வரித்துறை அதிகாரிகள் சோதனை நடத்தி வருகின்றனர்.



சட்டப்பேரவைத் தேர்தல் நெருங்கி வரும் நிலையில், தமிழகம் முழுவதும் பரவலாக வாக்காளர்களுக்குப் பணப்பட்டுவாடா செய்யப்படுவதாக புகார் எழுந்தன. இதனடிப்படையில், தேர்தல் ஆணையம் தீவிர விசாரணை நடத்தி வருகிறது.இந்நிலையில், கரூரில் முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜியின் ஆதரவாளரும், பிரபல ஒப்பந்ததாரருமான எம்.சி சங்கரின் வீடு மற்றும் அலுவலகங்களில் வருமான வரித்துறை சோதனை நடத்தியது.அதோடு, கரூர் கோவை சாலையில் உள்ள, மணி என்பவருக்கு சொந்தமான கொங்கு மெஸ், சக்தி மெஸ் ஆகிய இடங்களிலும் சோதனை நடைபெற்று வருவதாக தகவல் வெளியகியுள்ளது. மத்திய பாதுகாப்பு படையினரின் உதவியுடன் 15 வாகனங்களில் வந்த, 30க்கும் மேற்பட்ட அதிகாரிகள் சோதனை நடத்தினர். இந்த முறை செந்தில் பாலாஜி கோவை தெற்கு தொகுதியில் போட்டியிடுகிறார் என்பது கவனிக்கத்தக்கது.

# "நாங்கள் பிரச்சாரத்துக்கு செல்வதா; நாடாளுமன்றத்துக்கு வருவதா?" அதிர் ரஞ்சன் சவுத்ரி

புதுடெல்லி, ஏப்.18-

தொகுதி மறுவரையறை மசோதா திடீர் என அறிமுகப்ப டுத்தப்பட்டுள்ள நிலையில், எங்கள் தலைவர்கள் தேர்தல் பிரச்சாரத்துக்கு செல்ல வேண்டுமா அல்லது நாடாளுமன்றத்துக்கு வர வேண்டுமா என காங்கிரஸ் தலைவர் அதிர் ரஞ்சன் சவுத்ரி கேள்வி எழுப்பியுள்ளார்.

இது குறித்து காங்கிரஸ் எம்.பி.யும் மேற்கு வங்க சட்டப்பேரவைத் தேர்தலின் பெர்ஹாம்பூர் தொகுதி வேட்பாளருமான அதிர் ரஞ்சன் சவுத்ரி கூறுகையில், "கட்சியின் அனைத்து உயர்மட்டத் தலைவர்களும் தற்போது தேர்தல் பிரச்சாரப் பணிகளில் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர். நாடாளுமன்றத்தில் திடீரென இந்த மசோதாவை அறிமுகப்படுத்தியதன் மூலம், அவர்கள் அவைக்குள்ளேயே முடக்கப்பட்டுள்ளனர்.



விவாதம் தொடர்ந்து நான்கு நாட்களுக்கு நீடித்தால், எங்கள் தலைவர்களால் அவையை விட்டு வெளியேறவே முடியாத சூழல் ஏற்படும். இது எங்கள் தேர்தல் பிரச்சாரத்தின் மீது குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தக்கூடும். தேர்தல் நாட்களுக்கு நடுவே இந்த மசோதாவை அறிமுகப்படுத்தியிருப்பது, எங்கள் கட்சியின் முக்கியத் தலைவர்களை சிக்கலுக்கு உள்ளாகி விட்டது.இது எதிர்க்கட்சிகளுக்கு எதிரான ஒரு அரசியல் ஆயுதம். பெண்களுக்கு 33 சதவீத இடஒதுக்கீடு வழங்கும் கோரிக்கையை காங்கிரஸ் கட்சி வெகு காலத்திற்கு முன்பே எழுப்பியிருந்தது. அப்போது பாஜக இந்த மசோதாவை கடுமையாக எதிர்த்தது. ஆனால், இன்று அதே கட்சி, அதற்கான முழுப் பெருமையையும் தானே தட்டிக்கொள்ள விரும்புகிறது. புதிய மக்கள் தொகை கணக்கெடுப்பு நடத்தாமலும், அனைத்துத் தரப்பினரின் நம்பிக்கையைப் பெறாமலும் மேற்கொள்ளப்படும் எந்தவொரு 'தொகுதி மறுவரையறை' நடவடிக்கையையும் எதிர்க்கட்சிகள் ஏற்றுக்கொள்ளாது" எனத் தெரிவித்தார்.தேர்தல்களுக்கு மத்தியில் நாடாளுமன்றக் கூட்டத்தொடர் நீட்டிக்கப்படுவதையும், மகளிர் மசோதா அறிமுகப்படுத்தப்படுவதையும் காங்கிரஸ் எதிர்க்கிறது. இது தொடர்பாக காங்கிரஸ் மூத்த தலைவர சோனியா காந்தி ஒரு பத்திரிகையில் கட்டுரை எழுதியுள்ளார். காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன் கார்கே இந்த எதிர்ப்பை முன்னின்று நடத்துகிறார்.

அரசியலமைப்புச் சட்டத்தின் 368வது பிரிவின்படி, ஒரு மசோதாவைத் திருத்துவதற்கு சிறப்புப் பெரும்பான்மை தேவைப்படுவதாகக் கருதப்படுகிறது. இந்த சிறப்புப் பெரும்பான்மை என்பது அவையின் மொத்த உறுப்பினர்களில் பெரும்பான்மையினரையும், வாக்களிக்கும் உறுப்பினர்களில் மூன்றில் இரண்டு பங்கையும் குறிக்கும். முன்மொழியப்பட்ட மூன்று மசோதாக்களில் ஒன்று 131வது அரசியலமைப்புத் திருத்த மசோதா ஆகும்.

இந்த அரசியலமைப்புத் திருத்த மசோதாவை நிறைவேற்ற இரு அவைகளிலும் சிறப்புப் பெரும்பான்மை தேவைப்படும். உறுப்பினர்களின் எண்ணிக்கையைக் கருத்தில் கொண்டு, மக்களவையில் அரசுக்கு சவால் ஏற்படக்கூடும். இருப்பினும், மற்ற இரண்டு மசோதாக்களை நிறைவேற்ற வெறும் 50 சதவிகித பெரும்பான்மையே போதுமானது. அது பாஜக தலைமையிலான மத்திய அரசிடம் இரு அவைகளிலும் உள்ளது.

இப்போது, எதிர்க்கட்சிகளின் எதிர்ப்பு காரணமாக 2029 பொதுத் தேர்தலின் போது மகளிர் இட ஒதுக்கீடு சட்டம் அமல்படுத்தப்படாமல் போகும் சூழலும் உள்ளது. இது நேர்ந்தால், பெண்களுக்கான இட ஒதுக்கீட்டை அமலாக்க எதிர்க்கட்சிகள் தங்களைத் தடுப்பதாக பாஜக புகார்களை முன்வைக்கும். எனவே, மகளிர் சட்டம் நிறைவேறுவது அல்லது தோல்வியடைவது ஆகிய இரண்டுமே பாஜகவிற்கு சாதகமாகவே அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# அதிமுக, பாஜக வேட்பாளர்கள் சொத்து விவரங்கள் குறித்து விசாரிக்கக் கோரி ஐகோர்ட்டில் வழக்கு

சென்னை, ஏப்.18-

அதிமுக முன்னாள் அமைச்சர்கள் ஜெயக்குமார், சி.வி.சண்முகம், ஆர்.பி.உதயகுமார், திண்டுக்கல் சீனிவாசன், தங்கமணி மற்றும் பாஜக வேட்பாளர் வானதி சீனிவாசன் ஆகியோர் தாக்கல் செய்த வேட்பு மனுக்களில் சொத்து விவரங்களை மறைத்தது குறித்து விசாரணை நடத்த வருமான வரித்துறைக்கு உத்தரவிடக் கோரி சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.



சென்னை ராயபுரம் தொகுதி அதிமுக வேட்பாளரான ஜெயக்குமார், விழுப்புரம் மாவட்டம் மைலம் தொகுதி அதிமுக வேட்பாளரான சி.வி.சண்முகம், மதுரை திருமங்கலம் தொகுதி அதிமுக வேட்பாளர் ஆர்.பி.உதயகுமார், திண்டுக்கல் தொகுதி அதிமுக வேட்பாளர் திண்டுக்கல் சீனிவாசன், நாமக்கல் மாவட்டம் குமாரபாளையம் தொகுதி அதிமுக வேட்பாளர் தங்கமணி, கோவை வடக்கு தொகுதி பாஜக வேட்பாளர் வானதி சீனிவாசன் ஆகியோர் தாக்கல் செய்த வேட்பு மனுக்களில் சொத்து விவரங்களை மறைத்துள்ளதாக, அந்தந்த தொகுதி வாக்காளர்கள் சார்பில் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

அந்த மனுக்களில், வேட்பு மனுக்களில் சொத்து விவரங்களை மறைத்த விவகாரம் தொடர்பாக வருமான வரித் துறை விசாரணை நடத்த உத்தரவிட வேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இந்த வழக்குகள், தலைமை நீதிபதி அமர்வில் விரைவில் விசாரணைக்கு வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# நாட்டில் பயணிகள் ரயில் போக்குவரத்து தொடங்கி 173வது ஆண்டு நிறைவு

## அஸ்வினி வைஷ்ணவ் பெருமிதம்

தானே, ஏப்.18-

பயணிகள் ரயில் போக்குவரத்து தொடங்கி 173வது ஆண்டு நிறைவு பெற்றுள்ளதாக ரயில்வே அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் பெருமிதம் தெரிவித்துள்ளார்.





நாட்டின் முதலாவது பயணிகள் ரயில் போக்குவரத்து 1853ம் ஆண்டு ஏப்ரல் 16ம் தேதி மகாராஷ்டிர மாநிலம் போரிபந்தர் (மும்பை) மற்றும் தானே இடையே தொடங்கப்பட்டது. இந்த போக்குவரத்து தொடங்கப்பட்டு நேற்றுடன் 173வது ஆண்டு நிறைவடைந்துள்ளது.

இதுதொடர்பாக ரயில்வே அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் தனது எக்ஸ் சமூக வலைதளப் பக்கத்தில் தானே ரயில்வே பாலம், அம்ரித் பாரத் ரயில் ஆகிய புகைப்படங்களை ஒருங்கிணைத்து ஒரே புகைப்படமாக நேற்று வெளியிட்டு 'பயணம் தொடர்கிறது' என்று குறிப்பிட்டுள்ளார்.

இதுகுறித்து ரயில்வே வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறியிருப்பதாவது: இந்திய ரயில்வேயின் 173 ஆண்டுகளைக் குறிக்கும் வகையில், தானே ரயில்வே பாலம், ஒரு பழங்கால ரயிலையும் சித்தரிக்கும் நம்பகமான காப்பகப் புகைப்படத்தையும் நாங்கள் பகிர்ந்துள்ளோம். இதன் மூலம், வரலாற்றுப் பதிவு சரிபார்க்கப்பட்ட ஆவணங்களுடன் ஒத்துப்போவது உறுதி செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.



# ஹார்முஸ் ஜலசந்தி பாதுகாப்பு குறித்து பிரதமர் மோடியுடன் பிரான்ஸ் அதிபர் போனில் ஆலோசனை

புதுடெல்லி, ஏப்.18-

பிரான்ஸ் அதிபர் இம்மானுவேல் மேக்ரான், பிரதமர் நரேந்திர மோடியுடன் நேற்று போனில் பேசினார். ஈரான் போர் நிலவரம் கவலை அளிப்பதாக தெரிவித்த தலைவர்கள் ஹார்முஸ் ஜலசந்தி பகுதியில் பாதுகாப்பான கப்பல் போக்குவரத்து நடைபெற வேண்டும் என வலியுறுத்தினர்.ஈரான் போர் காரணமாக ஹார்முஸ் ஜலசந்தி பகுதியில் எரிபொருள் கப்பல் போக்குவரத்து ஸ்தம்பித்துள்ளது. அமெரிக்கா ஈரான் இடையே நடைபெற்ற பேச்சுவார்த்தையும் தோல்வியடைந்துள்ளது. ஈரானுடன் மீண்டும் பேச்சுவார்த்தை நடத்தும் முயற்சிகள் நடைபெறுகின்றன.இந்நிலையில் அமெரிக்காவுடன் ஈரான் ஒப்பந்தம் செய்யாவிடில் மீண்டும் போர் தொடங்கும் என அமெரிக்கா எச்சரிக்கை விடுத்துள்ளது. இந்நிலையில் பிரதமர் நரேந்திர மோடியை பிரான்ஸ் அதிபர் இம்மானுவேல் மேக்ரான் நேற்று போனில் தொடர்பு கொண்டு பேசினார். மேற்கு ஆசிய நிலவரம் குறித்து கவலை தெரிவித்த தலைவர்கள், ஹார்முஸ் ஜலசந்தி பகுதியில் பாதுகாப்பான கப்பல் போக்குவரத்து நடைபெற வேண்டும் என வலியுறுத்தினர்.இது குறித்து எக்ஸ் தளத்தில் பிரதமர் மோடி கூறியிருப்பதாவது: எனது நண்பர் இம்மானுவேல் மேக்ரானிடம் இருந்து போன் அழைப்பு வந்தது. மேற்கு ஆசிய நிலவரம் குறித்து இருவரும் விவாதித்தோம். ஹார்முஸ் ஜலசந்தி பகுதியில் தடையற்ற கப்பல் போக்குவரத்து உடனடியாக நடைபெற வேண்டும் என்பதில் இருவரும் ஒருமித்த கருத்தை கொண்டுள்ளோம். இவ்வாறு பிரதமர் மோடி கூறியுள்ளார்.

# "நடிகருக்காக விசில் அடிக்கலாம், நாட்டை ஒப்படைக்க முடியாது" பிரகாஷ்ராஜ் கருத்து

பழநி, ஏப்.18-

நடிகருக்காக விசில் அடிக்கலாம். ஆனால், நாட்டை தூக்கிக் கொடுக்க முடியாது என்று நடிகர் பிரகாஷ்ராஜ் தெரிவித்துள்ளார்.பழநி தொகுதியில் திமுக கூட்டணி சார்பில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி வேட்பாளர் என்.பாண்டி போட்டியிடுகிறார். இவரை ஆதரித்து, அக்கட்சியின் இளைஞர் அணி, மாணவர்கள் அணி ஒருங்கிணைத்து நடத்திய இளைஞர் கலை விழா நேற்று நடைபெற்றது.



அதில், நடிகர் பிரகாஷ்ராஜ் பங்கேற்று பேசியதாவது: தமிழகத்தில் நடக்கவிருக்கும் தேர்தல், திராவிட மாடல், அடிமை மாடல், சினிமா மாடல் ஆகிய 3 மாடலுக்குமான தேர்தல். திராவிட மாடல் கல்வி கொடுத்தது, மொழியைக் காப்பாற்றியது. இனம் மானத்தை காப்பாற்ற போராடிக் கொண்டிருக்கிறது. தமிழகத்துக்கு துரோகம்: அடிமை மாடல், நம் தன்மானத்தை, சுயமரியாதையை தூக்கிச் சென்று மோடி காலடியில் வைக்கும். தொகுதி மறுவரையறை மசோதா அமலுக்கு வந்தால் தென்னிந்தியாவின் 50 ஆண்டுகால அரசியல் மாறிவிடும்.மக்கள் தொகை அடிப்படையில் தொகுதி மறுவரையறை செய்யப் போவதாக கூறுகின்றனர். இந்த மசோதாவால் தமிழகத்துக்கு துரோகம் நடக்கிறது. அதற்கு இந்த அடிமை மாடல் ஆதரவு கொடுத்து வருகிறது.

ஒற்றுமைக்கும், பிரிவினைக்கும்...: திருப்பரங்குன்றத்தை வைத்து மதுரையை, மணிப்பூராக மாற்ற முயற்சிக்கின்றனர். மதுரையை அடுத்து பழநிதான். சினிமா மாடலில் ஒரு பாடலில் மருத்துவர், பொறியாளர், முதல்வராகி விடலாம். அந்த நடிகர் (விஜய்) மக்களுக்கோ, மொழிக்கோ, தன்மானத்துக்கோ பிரச்சினை வந்தபோது வந்து நின்றிருக்கிறாரா?

நடிகருக்காக விசில் அடிக்கலாம். ஆனால், நாட்டை தூக்கிக் கொடுக்க முடியாது. நமக்கு எந்த மாடல் வேண்டும் என்று முடிவு செய்து கொள்ளுங்கள். இந்த தேர்தல் திமுக, அதிமுக மற்றும் திமுக, தவெகவுக்கான தேர்தல் இல்லை. ஒற்றுமைக்கும், பிரிவினைக்கும் நடக்கும் தேர்தல். இவ்வாறு அவர் பேசினார்

# மாநிலங்களவையை வழிநடத்த 6 பேர் கொண்ட குழு நியமனம்

புதுடெல்லி, ஏப்.18-

மாநிலங்களவை தலைவர், துணைத் தலைவர் இல்லாத நிலையில் வழி நடத்தும் குழுவுக்கு அதிமுக எம்.பி. தம்பிதுரை உட்பட 6 பேர் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

மாநிலங்களவை எம்.பி.யாக இருந்த ஹரிவன்ஷின் பதவிக்காலம், கடந்த ஏப்ரல் 9ம் தேதியுடன் நிறைவடைந்தது. இதைத் தொடர்ந்து அந்த அவையின் எம்.பி.யாக ஹரிவன்ஷை குடியரசுத் தலைவர் நியமித்த நிலையில், கடந்த 10ம் தேதி அவர் நியமன எம்பியாக பதவியேற்றுக் கொண்டார். இந்நிலையில், மாநிலங்களவை துணைத் தலைவர் பதவிக்கான தேர்தல் டெல்லியில் இன்று நடைபெற உள்ளது. அந்தப் பதவியை ஏற்கெனவே தொடர்ந்து 2 முறை ஹரிவன்ஷ் வகித்த நிலையில், அப்பதவிக்கு அவர் மீண்டும் தேர்வு செய்யப்பட வாய்ப்புள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.இதனிடையே மாநிலங்களவைத் தலைவர் துணைத் தலைவர் இல்லாத வேளைகளில், அந்த அவையை வழி நடத்தும் குழுவை குடியரசு துணைத் தலைவரும், மாநிலங்களவைத் தலைவருமான சி.பி.ராதாகிருஷ்ணன் நேற்று முன்தினம் மாற்றியமைத்தார். அதில் 6 பேர் இடம்பெற்றுள்ளனர்.அந்தக் குழுவில், அதிமுக எம்பி தம்பிதுரை, பாஜக எம்பிக்கள் தினேஷ் சர்மா, பாங்னோன் கோன்யாக், கன்ஷியாம் திவாரி, பிஜு ஜனதா தள கட்சி எம்.பி. சஸ்மித் பத்ரா, காங்கிரஸ் எம்.பி. ஃபுலோ தேவி நேதாம் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர். மாநிலங்களவை பொதுச் செயலர் பி.சி.மோடி வெளியிட்டுள்ள அறிவிப்பில் இது தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சட்டப்பேரவைத் தேர்தலையொட்டி மதுக்கடைகள், பார்கள் 4 நாட்கள் மூடல்

சென்னை, ஏப்.18-

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலையொட்டி ஏப்.21, 22, 23 மற்றும் மே 4 ஆகிய 4 நாட்கள் மாநிலம் முழுவதும் உள்ள மதுக்கடைகள், பார்கள் மூடப்படும் என்று அனைத்து மாவட்ட தேர்தல் அதிகாரிகள் உத்தரவிட்டுள்ளனர்.

தமிழக சட்டப்பேரவைத் தேர்தல் வரும் 23ம் தேதி நடைபெறுகிறது. தேர்தல் நாளான ஏப்.23ம் தேதி, வாக்குப்பதிவு நிறைவடையும் அன்று மாலை 6 மணிக்கு முந்தைய 48 மணி நேரத்தை அமைதி நேரமாக தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

இதனால் மாநிலத்தில் அமைதியை கடைபிடிக்கும் நோக்கில் மதுக்கடைகளை மூட தேர்தல் ஆணையம் அறிவுறுத்தி இருந்தது. அதன்படி தமிழகம் முழுவதும் உள்ள அனைத்து மாவட்ட தேர்தல் அலுவலர்களும், மதுக்கடைகளை மூடுவது தொடர்பாக செய்திக்குறிப்புகளை வெளியிட்டுள்ளனர்.

அதன் விவரம்: தமிழக சட்டப்பேரவைத் தேர்தலை முன்னிட்டு அனைத்து மாவட்டங்களிலும், தேர்தல் சுதந்திரமாகவும், நியாயமாகவும், அமைதியாகவும், சுமுகமாகவும் நடைபெறுவதை உறுதி செய்யும் நோக்கில், தமிழ்நாடு மதுபான சில்லறை விற்பனை (கடைகள் மற்றும் பார்கள்) விதிகள் 2003, விதி 12(2)படி உரிமம் பெற்று இயங்கி வரும் இந்திய தயாரிப்பு அயல்நாட்டு மதுபானம் (மிவிதிலி) சில்லறை விற்பனை கடைகள், அவற்றுடன் இணைந்த பார்கள் உள்ளிட்ட அனைத்தும் ஏப். 21ம் தேதி காலை 10 மணிமுதல், வாக்குப்பதிவு நாளான 23ம் தேதி நள்ளிரவு 12 மணி வரையும், வாக்கு எண்ணிக்கை நாளான மே 4ம் தேதி என 4 நாட்களுக்கு மூடப்பட்டிருக்கும்.

மேற்குறிப்பிட்ட நாட்களில் மதுபானங்கள் விற்பனை செய்யப்பட மாட்டாது. அன்றைய தினங்களில் விதிகளுக்கு மாறாக மது விற்பனை ஏதும் செய்யப்பட்டால் கடுமையான நடவடிக்கை மேற்கொள்ளப்படும். இவ்வாறு செய்திக்குறிப்புகளில் கூறப்பட்டுள்ளது.

# எம்.ஜி.ஆர், ஜெயலலிதாவுடன் அழிந்த அதிமுக

தஞ்சாவூர், ஏப்.18-

தஞ்சாவூர் மாவட்டம் ஒரத்தநாடு சட்டமன்றத் தொகுதியில் 2026 தேர்தலை முன்னிட்டு, திமுக வேட்பாளராகக் களமிறங்கியுள்ள ஆர். வைத்திலிங்கம் தீவிர தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டு வருகிறார்ஒரத்தநாட்டில் திமுக வேட்பாளரான வைத்திலிங்கத்திடம், நான்கு கட்ட போட்டியை பற்றியும் ஒரத்தநாட்டில் திமுகவின் வெற்றி நிலை எப்படியுள்ளது என செய்தியாளர் கேள்வியெழுப்பினார்.அந்த கேள்விக்கு பதிலளித்த அவர் திமுகவுக்கு வெற்றி வாய்ப்பு உறுதி. இந்த ஐந்து வருடகளில் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் செய்த சாதனைகளை மகளிர், மாணவ மாணவிகள், விவசாயிகள், அரசு ஊழியர்கள், மாற்றுத்திறனாளிகள் மற்றும் பலதரப்பட்ட மக்களும் வரவேற்கிறார்கள் போற்றுகிறர்கள் அதனால் வெற்றி வாய்ப்பு பிரகாசமாக இருக்கிறது என்றார்.அண்ணாதிமுக கட்சி என்பது இப்பொழுது இல்லை எனவும் அது எடப்பாடி அண்ணாதிமுகவாக மாறியது என குறிப்பிட்டார். எம்.ஜி.ஆர், ஜெயலலிதாவுடன் அதிமுக என்ற கட்சியை இல்லாமல் போய்விட்டது, இப்போது இருப்பது பாரதிய ஜனதாவின் அடிமை அதிமுக என்று கூறினார். தீவிர பிரச்சாரத்தில் ஈடுபட்டுள்ள வைத்திலிங்கம், திமுக அரசின் கடந்த ஐந்தாண்டு கால சாதனைகளையும், மக்கள் நலத்திட்டங்களையும் எடுத்து கூறி வாக்கு சேகரித்து வருகிறார்

# தமிழகத்தில் நாளை முதல் ஏப்.23ம் தேதி வரை மழைக்கு வாய்ப்பு

சென்னை, ஏப்.18-

தமிழகத்தில் நாளை முதல் ஏப்.23ம் தேதி வரை ஓரிரு இடங்களில் மழை பெய்ய வாய்ப்புள்ளது. இது தொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: "மரத்வாடா முதல் மன்னார் வளைகுடா வரை உள் கர்நாடகா, ராயல சீமா மற்றும் தமிழகம் வழியாக சுமார் 900 மீட்டர் உயரத்தில், ஒரு வளிமண்டல காற்றழுத்த தாழ்வுப் பாதை நிலவுகிறது. இதன் காரணமாக நாளை (ஏப்.18) முதல் 21ம் தேதி வரை மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்கள், டெல்டா மாவட்டங்களின் கடலோர பகுதிகள் மற்றும் ராமநாதபுரம் மாவட்டத்தில் ஓரிரு இடங்களிலும், காரைக்கால் பகுதிகளிலும் லேசான மழை பெய்யக்கூடும். இதர தமிழகம் மற்றும் புதுச்சேரி பகுதிகளில் வறண்ட வானிலையே நிலவக்கூடும்.

ஏப்.22, 23 தேதிகளில் மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்கள், டெல்டா மாவட்டங்கள் மற்றும் தெற்கு கடலோர தமிழக மாவட்டங்களில் ஓரிரு இடங்களிலும், காரைக்கால் பகுதிகளிலும் லேசான மழை பெய்யக்கூடும். இதர தமிழகத்தில் வறண்ட வானிலை நிலவக்கூடும். ஏப்.18 (நாளை) முதல் ஏப்.21ம் தேதி வரை உள் தமிழக மாவட்டங்களில், அதிகபட்ச வெப்ப நிலை ஒரு சில இடங்களில் வழக்கத்தை விட 5 டிகிரி ஃபாரன்ஹீட் வரை உயரக்கூடும்.சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் நாளை (ஏப்.18) வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். அதிகபட்ச வெப்ப நிலை 99 டிகிரி, குறைந்த பட்ச வெப்ப நிலை 82 டிகிரி ஃபாரன்ஹீட் அளவை ஒட்டி இருக்கக்கூடும்" என்று செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

# நத்தம் விஸ்வநாதன் கூட்டத்துக்கு செல்வதை தடுக்க சிறுமலை அடிவாரம் பகுதியில் மக்கள் தங்கவைப்பு



திண்டுக்கல், ஏப்.18-

நத்தம் தொகுதிக்கு உட்பட்ட சிறுமலை அடிவாரம் பகுதியில் மக்களை திமுகவினர் தங்கவைத்திருப்பதாக தகவல் கிடைத்தது. அதையடுத்து அங்கு சென்ற அதிமுகவினர், திமுகவினருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர்.திண்டுக்கல் அருகே நத்தம் தொகுதிக்கு உட்பட்ட சிறுமலை அடிவாரம் பகுதியில் தனியார் தோட்டங்களில் ஏராளமான பொதுமக்களை திமுகவினர் தங்க வைத்திருப்பதாக அதிமுகவினருக்குத் தகவல் கிடைத்தது. பிரியாணி பொட்டலம் விநியோகம்இதையடுத்து அங்கு சென்ற அதிமுகவினர், தோட்டங்களிலும், தகர ஷெட்டுகளிலும் நூற்றுக்கணக்கான பெண்கள் மற்றும் ஆண்கள் தங்க வைக்கப்பட்டு அவர்களுக்கு பிரியாணி பொட்டலங்கள் கொடுக்கப்பட்டுக் கொண்டிருந்ததைக் கண்டனர்.அவர்களை மாலை வரை இதே இடத்தில் தங்கி இருக்க வேண்டும் என்று திமுகவினர் வற்புறுத்தியதாகக் கூறப்படுகிறது. இதுதொடர்பாக தேர்தல் பறக்கும் படையினருக்கு அதிமுகவினர் தகவல் தெரிவித்தனர். பின்னர், அப்பகுதிக்குச் சென்ற அதிமுகவினர், திமுகவினருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர்.

பறக்கும்படையினர் வருகைஅங்கு வந்த தேர்தல் பறக்கும் படையினர் இரு தரப்பினரையும் சமரசம் செய்து தோட்டங்களில் தங்க வைக்கப்பட்டிருந்தவர்களை அவர்கள் வருகை தந்த வாகனங்களிலேயே ஏற்றி அனுப்பி வைத்தனர்.

நத்தம் தொகுதியில் அதிமுக சார்பில் போட்டியிடும் முன்னாள் அமைச்சர் நத்தம் விஸ்வநாதன் பிரச்சாரத்தின் போது கூட்டம் கூடவிடாமல் தடுப்பதற்காக திமுகவினர் மக்களை அழைத்துவந்து தங்க வைத்ததாகக் கூறப்படுகிறது.

# காதல் கொலைகளை தடுக்க சிறப்பு சட்டம் நிறைவேற்ற அரசுக்கு உத்தரவிட முடியாது

## ஐகோர்ட் உத்தரவு



மதுரை, ஏப்.18-

'காதல் விவகார படுகொலைகளை தடுக்க சிறப்புச் சட்டம் நிறைவேற்ற அரசுக்கு உத்தரவிட முடியாது' என உயர் நீதிமன்றம் தெரிவித்துள்ளது.தூத்துக்குடியைச் சேர்ந்த பொன் காந்திமதிநாதன் உயர் நீதிமன்ற மதுரை அமர்வில் தாக்கல் செய்த மனுவில், ''நெல்லையில் மென்பொருள் பொறியாளர் கவின், காதல் விவகாரத்தில் படுகொலை செய்யப்பட்டார்.

தமிழகத்தில் காதல் விவகார கொலைகள் அதிகளவில் நடைபெற்று வருகின்றன. இதைத் தடுக்க தனிச்சட்டம் இல்லை. எனவே காதல் விவகார கொலைகளை தடுக்க சிறப்புச் சட்டம் நிறைவேற்ற அரசுக்கு உத்தரவிட வேண்டும்'' என கோரியிருந்தார்.இந்த மனு நீதிபதிகள் சுரேஷ்குமார், வடமலை அமர்வில் விசாரணைக்கு வந்தது. அரசு தரப்பில், ''நெல்லை கவின் கொலை வழக்கு சிபிசிஐடிக்கு மாற்றப்பட்டு நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. விசாரணை நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் இருக்கிறது.

கவின் குடும்பத்துக்கு வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழ் உரிய இழப்பீடு வழங்கப்பட்டுள்ளது. காதல் விவகார கொலைகளை தடுக்க சிறப்புச் சட்டம் நிறைவேற்றுவது தொடர்பாக ஓய்வுபெற்ற நீதிபதி தலைமையில் ஆய்வுக்குழு அமைக்கப்பட்டு அறிக்கை பெறப்பட்டுள்ளது'' என கூறப்பட்டது.இதையடுத்து, ''சிறப்புச் சட்டம் இயற்ற அரசுக்கு நீதிமன்றம் உத்தரவிட முடியாது. மனுமுடித்து வைக்கப்படுகிறது'' என நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

# காங்., திமுகவின் இரட்டை வேடம் அம்பலம் தொகுதி மறுவரையறை விவகாரத்தில் பாஜக சாடல்



சென்னை, ஏப்.18-

மகளிர் இடஒதுக்கீட்டுடன் நேரடியாகத் தொடர்புடைய தொகுதி மறுவரையறையை எதிர்ப்பதன் மூலம் திமுகவும், காங்கிரஸும் தாங்கள் பெண்களுக்கு எதிரான கட்சிகள் என்பதை மீண்டும் ஒருமுறை நிரூபித்துள்ளன என்று தமிழக பாஜக தலைமை செய்தித் தொடர்பாளர் நாராயணன் திருப்பதி விமர்சித்துள்ளார். இது குறித்து சென்னை கமலாலயத்தில் செய்தியாளர்களிடம் அவர் இன்று கூறியது: "தொகுதி மறுவரையறை என்ற பெயரில் தமிழகத்தின் உரிமைகள் பறிக்கப்படும். தென் மாநிலங்களின் பலம் குறையும் என்று ஒரு பொய்யான அச்சத்தை முதல்வர் ஸ்டாலின் கடந்த சில நாட்களாக விதைத்து வந்தார்.மத்திய அரசின் நிலைப்பாட்டை பிரதமர் மோடி மிகத் தெளிவாக விளக்கிய பிறகும், இந்த விவகாரத்தில் அரசியல் ஆதாயம் தேடவே ஸ்டாலின் முயற்சிக்கிறார். தமிழகத்தில் திமுக ஆட்சியின் ஊழல்கள், சட்டம் ஒழுங்கு சீர்கேடு, பெண்களுக்கு எதிரான குற்றங்களை மறைக்க 'மாநில உரிமை' என்ற போர்வையில் இத்தகைய போலிப் பிரச்சாரங்களை அவர் செய்து வருகிறார். தற்போது தமிழகத்துக்கான எம்.பி. தொகுதிகள் 39ல் இருந்து 59 ஆக உயரும் என்ற செய்தி வெளிவந்துள்ள நிலையில், அதை வரவேற்க மனமின்றி திமுக காங்கிரஸ் கூட்டணி எதிர்ப்பு தெரிவிப்பது அவர்களது இரட்டை வேடத்தை அம்பலப்படுத்துகிறது.2026ம் ஆண்டில் தொகுதி மறுவரையறை செய்வது என்பது கடந்த 2001ம் ஆண்டிலேயே முடிவு செய்யப்பட்ட ஒன்று. மேலும், தொகுதி மறுவரையறை என்பது மகளிருக்கான 33 சதவீத இடஒதுக்கீட்டுடன் நேரடியாக தொடர்புடையது. இதை எதிர்ப்பதன் மூலம் திமுகவும், காங்கிரஸும் தாங்கள் பெண்களுக்கு எதிரான கட்சிகள் என்பதை மீண்டும் ஒருமுறை நிரூபித்துள்ளன.தன் குடும்பத்தைச் சேர்ந்த பெண்களுக்குக்கூட அரசியலில் உரிய அங்கீகாரம் வழங்காமல், வாரிசு அரசியலில் மகனுக்கு மட்டுமே முக்கியத்துவம் கொடுக்கும் ஸ்டாலின், பெண்களின் முன்னேற்றத்தைப் பற்றிப் பேச தகுதியற்றவர். அவருக்கு துணிச்சல் இருந்தால் 'மகளிர் இடஒதுக்கீட்டை நாங்கள் எதிர்க்கிறோம்' என்று நேரடியாக சொல்லட்டும். தமிழக மக்கள் உரிய பாடம் புகட்டுவார்கள்'' என்று அவர் கூறினார்.

# திசையன்விளை பல்கலை. கல்லூரியின் 17வது ஆண்டு விழா மாணவர்களுக்கு 100% வேலைவாய்ப்பு -முதல்வர் பெருமிதம்



திசையன்விளை ஏப். 18-

திசையன்விளை மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகக் கல்லூரியின் 17வது ஆண்டு விழா மற்றும் விளையாட்டு விழா சிறப்பாக நடைபெற்றது. கல்லூரி முதல்வர் மற்றும் சிறப்பு விருந்தினர்கள் குத்துவிளக்கேற்றி விழாவைத் தொடங்கி வைத்தனர். கல்லூரி உடற்கல்வி இயக்குநர் முனைவர் சந்திரசேகர் வரவேற்புரை வழங்கினார். ஆண்டறிக்கையைச் சமர்ப்பித்த கல்லூரி முதல்வர் முனைவர் து. லில்லி பேசுகையில், "இந்தக் கல்வியாண்டில் இளங்கலை மூன்றாமாண்டு மற்றும் முதுகலை இரண்டாமாண்டு பயிலும் மாணவ மாணவியருக்கு 100% வேலைவாய்ப்பு உறுதி செய்யப்பட்டுள்ளது" என்பதை மகிழ்ச்சியுடன் பகிர்ந்து கொண்டார். ஆவுடை ஜி. பாலன் (மனிதம் காப்போம் அறக்கட்டளை): படிப்பு ஒன்றே முன்னேற்றத்திற்கு வழிஎன்றும், மாணவர்கள் போதைப் பழக்கங்களிலிருந்து விலகி இருக்க வேண்டும் என்றும் வலியுறுத்தினார். பாண்டி அருணா (DCFA பிசினஸ் மேனேஜர்): மாணவர்கள் தங்களது இலக்குகளைத் துல்லியமாக நிர்ணயிக்க வேண்டும்என அறிவுறுத்தினார்.சத்யா ஏஜென்சி பிரக்சிபா, சன் மோட்டார்ஸ் விஜயராஜ், கீதா ஜுவல்லரி விஜேஷ்குமார், சண்முகம் ஜுவல்லரி இசக்கி முத்துக்குமார், வசந்த் அண்ட் கோ மகேஷ் மற்றும் மாலை முரசு நிருபர் வேலாயுதம் உள்ளிட்ட பல பிரமுகர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.பரிசளிப்பு விழா:விளையாட்டு விழாவை முன்னிட்டு நடத்தப்பட்ட கபடி, வாலிபால், பேட்மிட்டன் மற்றும் ஓட்டப்பந்தயங்களில் வெற்றி பெற்ற பேராசிரியர்கள், அலுவலக ஊழியர்கள் மற்றும் மாணவர்களுக்குப் பதக்கங்களும் கோப்பைகளும் வழங்கப்பட்டன. மேலும், பல்கலைக்கழகத் தேர்வில் முதல் மற்றும் இரண்டாம் இடம் பிடித்த மாணவர்களுக்குச் சான்றிதழ்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டது.ஒருங்கிணைப்பு:தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் இரா. தணிகைச்செல்வி, பேராசிரியர்கள் முனைவர் ழி. ஆனந்த வேணி, முனைவர் றி. ஜெயஸ்ரீ ஆகியோர் போட்டிகளைத் திறம்பட ஒருங்கிணைத்தனர். விழாவின் இறுதியாக மாணவ மாணவியரின் கண்கவர் கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றன. முனைவர் ஆனந்த வேணி நன்றியுரை கூற விழா இனிதே நிறைவுற்றது.



# அலங்காநல்லூரில் தீரன் சின்னமலை பிறந்த நாள் சிலைக்கு திமுக வேட்பாளர் வெங்கடேசன் மரியாதை

அலங்காநல்லூர்.ஏப்.18-

சுதந்திரப் போராட்ட மாவீரர் தீரன் சின்னமலை கவுண்டர் பிறந்த நாளை முன்னிட்டு மதுரை மாவட்டம் அலங்காநல்லூர் கலைவாணர்நகர் ஏ.எம்.எம். பள்ளி வளாகத்தில் அமைந்துள்ள அவரது சிலைக்கு சோழவந்தான் தொகுதி திமுக வேட்பாளர் வெங்கடேசன், மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். அதனை தொடர்ந்து கவுண்டர் மகாஜனா சங்கத்தின் சார்பில் அவருக்கு கைத்தறி ஆடை அணிவித்து வரவேற்றனர்.

இதில் திமுக ஒன்றிய செயலாளர்கள் தன்ராஜ், முத்தையன், பரந்தாமன் அருண்குமார், முன்னாள் யூனியன் சேர்மன் ஆர்.எஸ்.ராம்குமார், நகரச் செயலாளர் ரகுபதி, முன்னாள் யூனியன் துணைச் சேர்மன் சங்கீதாமணிமாறன், கிழக்கு ஒன்றிய துணைச் செயலாளர் வாவிடமருதூர் கார்த்திகேயன், ஒன்றிய பொருளாளர் சுந்தர், பேரூராட்சி தலைவர் ரேணுகாஈஸ்வரி கோவிந்தராஜ், துணைத்தலைவர் சுவாமிநாதன், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் சேதுசீனிவாசன், ஒன்றிய நிர்வாகி அற்புதம், ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் சந்தனகருப்பு, மாணவரணி அமைப்பாளர் யோகேஷ் சோழவந்தான் தொகுதி தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் தவசதீஷ், விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் ஜெயராம், நிர்வாகிகள் ஏ.கே.டி. தெய்வம், வேல்முருகன், ராஜேஷ், தனிச்சியம் செல்லமணி, சுரேஷ், மதலையப்பன், உள்பட பலர் கலந்து கொண்டனர்.

# பேரணாம்பட்டு அருகே வீட்டில் பதுக்கிய 1,361 மதுபாட்டில்கள் பறிமுதல்!




வேலூர், ஏப்.18-

வேலூர் மாவட்டம் பேரணாம்பட்டு அருகே வீட்டில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த 1,361 மதுபாட்டில்கள் பறிமுதல் செய்யப்பட்டது. வேளாங்கண்ணி என்பவர் வீட்டில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த மதுபாட்டிகளை போலீசார் பறிமுதல் செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்



# ரஷ்யா நடத்திய பயங்கர தாக்குதலில் 16 பேர் உயிரிழப்பு

கீவ், ஏப்.18-

உக்ரைன் தலைநகர் கீவ் பகுதியில் குடியிருப்புகள் மீது ரஷ்யா நேற்று முன்தினம் 700 ட்ரோன்கள் மற்றும் ஏவுகணைகள் மூலம் பல மணி நேரம் தாக்குதல் நடத்தியது. இதில் 16 பேர் உயிரிழந்தனர், 80 பேர் காயம் அடைந்தனர்.கடந்த சில வாரங்களாக உக்ரைன் மீது மிகப் பெரியளவிலான தாக்குதலை ரஷ்யா நடத்தவில்லை. தற்போது உக்ரைன் மீது மீண்டும் மிகப் பெரியளவிலான தாக்குதலை ரஷ்யா நேற்று முன்தினம் நடத்தியது. உக்ரைன் தலைவர் கீவ் பகுதியில் உள்ள அடுக்கு மாடி குடியிருப்புகளை நோக்கி 700 ட்ரோன்கள் மற்றும் ஏராளமான ஏவுகணைகளை ரஷ்யா பல மணி நேரம் வீசியது.காலை முதல் இரவு வரை நடைபெற்ற தொடர் தாக்குதலில் 16 பேர் உயிரிழந்தனர், 80 பேர் காயம் அடைந்தனர். நான்கு ஆண்டுகளுக்கு மேலாக ரஷ்யா நடத்தி வரும் தாக்குதலில் உக்ரைன் மக்கள் 15,000 பேர் உயிரிழந்துள்ளதாக ஐ.நா தெரிவித்துள்ளது. வான் பாதுகாப்பு ஆயுதங்களை அதிகளவில் வழங்கக் கோரி ஜெர்மனி மற்றும் நார்வே நாடுகளுக்கு உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கி 2 நாள் பயணம் மேற்கொண்டுள்ளார்.இந்நிலையில் ரஷ்யா இந்த மிகப் பெரிய தாக்குதலை நடத்தியுள்ளது. உக்ரைன் உள்நாட்டில் ட்ரோன்கள் மற்றும் ஏவுகணைகளை உருவாக்கி வருகிறது. ஆனால், அவை அமெரிக்காவின் பேட்ரியாட் ஏவுகணைகளுக்கு நிகராக இல்லை. ஆயுத பற்றாக்குறை மட்டும் அல்லாமல் போர் காரணமாக நிதி நெருக்கடியிலும் உக்ரைன் சிக்கியுள்ளது.

ஐரோப்பிய யூனியன் 90 பில்லியன் யூரோ கடன் அளிப்பதாக உறுதி அளித்திருந்தது. ஆனால் ஹங்கேரி எதிர்ப்பால் இந்தக் கடன் நிலுவையில் உள்ளது. இதை விரைவில் வழங்கும்படி உக்ரைன் கோரிக்கை விடுத்துள்ளது.ஈரான் போர் காரணமாக அமெரிக்க ஆயுதங்களின் கையிருப்பு குறைந்து வருவதும், உக்ரைனுக்கு அமெரிக்க ஆயுதங்கள் கிடைப்பதில் சிக்கலை ஏற்படுத்தியுள்ளது. ஆயுத உதவி அளிப்பதாக உறுதி அளித்த பல நட்பு நாடுகள் கைவிரித்து விட்டதாக அதிபர் ஜெலன்ஸ்கி கூறியுள்ளார்.

# திசையன்விளை பல்கலை. கல்லூரியில் 9வது பட்டமளிப்பு விழா

## 98 மாணவ மாணவிகளுக்குப் பட்டங்கள் வழங்கப்பட்டன




திசையன்விளை, ஏப்.18-

திசையன்விளை மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகக் கல்லூரியில் 9வது ஆண்டு பட்டமளிப்பு விழா சிறப்பாக நடைபெற்றது. கல்லூரி முதல்வர் முனைவர் து லில்லி தலைமை வகித்து வரவேற்புரையாற்றினார். அதன் பின்னர் கல்லூரி முதல்வர் மற்றும் சிறப்பு விருந்தினர்கள் மற்றும் பேராசிரியர்கள் குத்து விளக்கு ஏற்றினார்கள். பட்டமளிப்பு விழாவிற்கு வருகைப்புரிந்த சிறப்பு விருந்தினர்கள் பற்றிய விபரங்கள் மற்றும் கல்லூரி வரலாறு போன்றவற்றை தனது உரையில் குறிப்பிட்டு பேசினார்.

மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக மேலாண்மை துறை பேராசிரியர் மற்றும் சிண்டிகேட் உறுப்பினருமான முனைவர் ழி ராஜலிங்கம் பட்டம் பெறவேண்டிய மாணவர்களுக்கு வாழ்க்கையில் எந்த ஒரு செயல்பாட்டிலும் "சிந்தித்து செயல்படுங்கள்" என்பதனை சிறுகதையுடன் சிறப்புரையாற்றினார்.மேலும் மற்றும் ஒரு சிறப்பு விருந்தினராக திருநெல்வேலி மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக கல்லூரிகளின் இயக்குநர் மற்றும் நாட்டு நலப்பணித்திட்ட ஒருங்கிணைப்பாளரான முனைவர் கி. வெளியப்பன் அவர்கள் கலந்து கொண்டு மாணவ மாணவிகளை இளங்கலை மற்றும் முதுகலையோடு நிற்காமல் வாழ்க்கையை மேம்படுத்த எவ்வாறு செயல்பட வேண்டும் என்பதனை மிகச் சிறப்பாக சிறப்புரையாற்றினார். அதனைத் தொடர்ந்து ஏப்ரல் 2025மற்றும் ஏப்ரல் 2024 ஆம் கல்வியாண்டில் தேர்ச்சி பெற்ற 98 மாணவ மாணவிகளுக்கு மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக மேலாண்மை துறை பேராசிரியர் மற்றும் சிண்டிகேட் உறுப்பினருமான முனைவர் ழி ராஜலிங்கம் அவர்கள் பட்டங்கள் வழங்கினார்.இவ்விழாவின் நிகழ்ச்சியை தமிழ்த்துறை உதவிப்பேராசிரியர் முனைவர். ழி ஆனந்த வேணி அவர்கள் தொகுத்துவழங்கினார். இந்த நிகழ்ச்சின் ஏற்பாடுகளை அனைத்தையும் கல்லூரி முதல்வர் முனைவர் து லில்லி அவர்கள், அனைத்து துறை தலைவர்கள், உதவிப் பேராசிரியர்கள், அலுவலக உதவியாளர்கள் மற்றும் மாணவ மாணவிகள் சிறப்பாக செய்திருந்தனர்.



# சோழவந்தான் அதிமுக வேட்பாளர் பிரச்சாரத்தில் கத்தி முனையில் மிரட்டல்! போதை ஆசாமி கைது

வாடிப்பட்டி ஏப். 18-
மதுரை மாவட்டம் சோழவந்தான் தனித் தொகுதி அதிமுக வேட்பாளர் மாணிக்கம் தேர்தல் பிரச்சாரத்தின் போது, ஒன்றிய செயலாளர் மற்றும் வாகன ஓட்டுநருக்குக் கொலை மிரட்டல் விடுத்த நபர் கைது செய்யப்பட்ட சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி யுள்ளது.*சம்பவம் நடந்தது என்ன?*தனிச்சியம் கிராமத்தில் பிரச்சாரம் செய்ய வேட்பாளர் மாணிக்கத்தின் வாகனம் சென்றபோது, பிரபு என்ற ஓட்டுநரிடமிருந்து ஒரு நபர் வாகனச் சாவியைப் பிடுங்கித் தகாத வார்த்தைகளால் திட்டியுள்ளார். இதனைத் தட்டிக்கேட்ட அலங்காநல்லூர் ஒன்றிய செயலாளர் ரவிச்சந்திரனை அந்த நபர் கத்தியால் குத்தி விடுவதாக மிரட்டியுள்ளார். தகவல் அறிந்து வந்த போலீசார், ஆண்டி என்பவரது மகன் முருகபாண்டி என்பவரைக் கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.வேட்பாளரின் குற்றச்சாட்டு:சம்பவ இடத்திற்கு வந்த வேட்பாளர் மாணிக்கம் பேசுகையில், "தோல்வி பயத்தில் திமுகவினர் இதுபோன்ற வன்முறைகளில் ஈடுபடுகின்றனர். எனக்குப் பாதுகாப்பு குறைபாடு இருப்பதாக ஏற்கனவே மாவட்ட எஸ்பியிடம் புகார் அளித்துள்ளேன். குறிப்பாக வாடிப்பட்டி தனிப்பிரிவு காவலர் ஒரு சமுதாயத்திற்கு ஆதரவாகச் செயல்படுகிறார். தேர்தல் நியாயமாக நடக்க வேண்டுமானால், ஒருதலைப்பட்சமாகச் செயல்படும் அதிகாரிகள் மீது மாநில தேர்தல் ஆணையம் உடனே நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்றார்.

*குடும்பத்தினரின் உருக்கமான பேச்சு:*

வேட்பாளரின் மனைவி பேசுகையில், "எங்கள் குடும்பம் மக்கள் நலனுக்காகவே உழைத்து வருகிறது. தொடர்ந்து கொலை மிரட்டல்கள் வந்தும் காவல்துறை உரியப் பாதுகாப்பு வழங்க மறுக்கிறது. மக்கள் பணிக்காக எங்கள் குடும்பமே உயிரை விடவும் தயாராக இருக்கிறோம்" என உருக்கமாகத் தெரிவித்தார்.

# "வெற்றி பெற்றார் கிருத்திகா தங்கபாண்டியன்!" பிரச்சார களத்தில் 'ரிசல்ட்' சொல்லி அதிரவைத்த சாது ராஜன்

மதுரை ஏப். 18-
மதுரை மாவட்டம் திருப்பரங்குன்றம் சட்டமன்றத் தொகுதியில் தேர்தல் களம் அனல் பறந்து வரும் நிலையில், ஒரு சுவாரஸ்யமான சம்பவம் பொதுமக்களிடையே பெரும் கவனத்தைப் பெற்றுள்ளது.பரபரப்பான பிரச்சாரம்:

திருப்பரங்குன்றம் திமுக வேட்பாளர் கிருத்திகா தங்கபாண்டியன் நல்லூர், சோளங்குருணி, வலையன்குளம், பாரப்பத்தி மற்றும் எலியார்பத்தி உள்ளிட்ட பகுதிகளில் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார். அப்போது சோளங்குருணி பகுதிக்கு வேட்பாளர் வருகை தந்தபோது,



அங்கிருந்த சாது ராஜன் என்ற பேச்சாளர் தேர்தல் முடிவுகளை அறிவிக்கும் பாணியில் பேசத் தொடங்கினார்.

வெற்றி அறிவிப்பு பாணி:அவர் மைக் பிடித்து, "இதோ தேர்தல் முடிவுகள்! சென்னை சேப்பாக்கம் திருவல்லிக்கேணி தொகுதியில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் தனது எதிரணியை விட 90,810 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுள்ளார்! அதேபோல், திருப்பரங்குன்றம் தொகுதியில் திமுக வேட்பாளர் கிருத்திகா தங்கபாண்டியன் தனது எதிரணியை விட 8,646 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுள்ளார்!" என முழங்கினார்.உற்சாகத்தில் தொண்டர்கள்:தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்படுவதற்கு முன்பே, ஒரு தேர்தல் அதிகாரி அறிவிப்பது போன்ற பாணியில் அவர் பேசியது, அங்கிருந்த திமுக மற்றும் கூட்டணிக் கட்சியினரிடையே பெரும் உற்சாகத்தை ஏற்படுத்தியது. "வாக்குப்பதிவு நடப்பதற்கு முன்பே வெற்றிக் கணக்கைச் சொல்லிவிட்டாரே!" எனப் பொதுமக்கள் வியப்புடன் பேசிச் சென்றனர்.



■ தென்காசி மாவட்டம் சங்கரன்கோவிலில் மதிமுக கட்சித் பொதுச்செயலாளர் வைகோ திருவேங்கடம் சாலையில் சங்கரன்கோவில் சட்டமன்ற தொகுதி காங்கிரஸ் வேட்பாளரை ஆதரித்து பிரச்சாரம் செய்தார். மேலும் திமுக கூட்டணிக் கட்சி நிர்வாகிகள் தொண்டர்கள் ஏராளமான பெருமக்கள் கலந்து கொண்டு சங்கரன்கோவில் சட்டமன்ற தொகுதி வேட்பாளர் சங்கை கணேசன் ஆதாரித்து கை சின்னத்தில் வாக்களிக்குமாறு கேட்டுக்கொண்டர்.



# பெங்களூருவில் ரூ.23.61 கோடி போதைப் பொருள் பறிமுதல்

பெங்களூரு, ஏப்.18-
பெங்களூரு மாநகர காவல் ஆணையர் சீமந்த் குமார் சிங் நேற்று செய்தியாளர்களிடம் கூறியதாவது: பெங்களூரு மத்திய குற்றப்பிரிவு போலீஸார் போதைப் பொருள் தடுப்புப் பிரிவினருடன் இணைந்து பாகலூர், பானசவாடி உள்ளிட்ட 8 காவல் நிலைய சரகத்துக்குட் பட்ட இடங்களில் போதைப் பொருள் கடத்தலைத் தடுக் கும் பணியில் ஈடுபட்டனர்.

இதில் மொத்தமாக 5.91 கிலோ எம்டிஎம்ஏ, 21.82 கிலோ ஹைட்ரோ கஞ்சா, 1.51கிலோ கோக்கைன் உள் ளிட்ட போதைப் பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டன. இது தொடர்பாக வெளிநாட்டினர் 3 பேர் (2 பெண் கள் ) உட்பட 10 பேர் கைது செய்யப்பட்டனர். இதில் 5 பேர் வெளி மாநிலங்களை சேர்ந்தவர்கள் ஆவர். கைதானவர்களிடம் இருந்து 3 கார், 2 இரு சக்கர வாக னங்கள், 9 செல்போன்கள், ரூ.50 ஆயிரத்து 500 ரொக் கம், 28 கிராம் தங்க நகைகள் ஆகியவை பறிமுதல் செய்யப்பட்டன.

பறிமுதல் செய்யப்பட்ட போதைப் பொருட்களின் சந்தை மதிப்பு ரூ.23.61 கோடி என மதிப்பிடப்பட்டுள் ளது. கைதான 10 பேர் மீதும் வழக்குப் பதிவு செய்து போலீஸார் விசாரணை நடத்தி வருகின்றனர். முதற்கட்ட விசாரணையில், 'கூரியர் மூலம் வெளிநாட்டில் இருந்தும் வெளி மாநிலங்களில் இருந்தும் போதைப் பொருளை வர வழைத்து, பெங்களூருவில் கல்லூரி மாணவர்கள் மத்தியில் விற்பனை செய்தது' தெரியவந்துள்ளது. இவ் வாறு அவர் தெரிவித்தார்.



# 96% மதிப்பெண்களுடன் வருணேஷ் முதலிடம்: வடக்குப்புதூர் வேல்ஸ் பள்ளிக்கு மீண்டும் ஒரு மகுடம்

வடக்குப்புதூர், ஏப்.18-
2025-2026 ம் கல்வியாண்டில் சிபிஎஸ்இ பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வில் வேல்ஸ் பப்ளிக் பள்ளியின் மூலம் மாணவ மாணவியர் தேர்வு எழுதினர். தேர்வு எழுதிய மாணவ மாணவியர் அனைவரும் 100 சதவீதம் தேர்ச்சி அடைந்து பள்ளிக்கு பெருமை சேர்த்துள்ளனர். மேலும் இத்தேர்வின் சிறப்பு அம்சமாக பள்ளி மாணவன் ச. வருணேஷ் 96% மதிப்பெண்களை பெற்று பள்ளியில் முதல் இடத்தையும், மாணவன் அ. சரவணன் 95% மதிப்பெண்கள் பெற்று பள்ளியில் இரண்டாம் இடத்தையும் பெற்றுள்ளனர். 90% க்கு மேல் 7 மாணவர்களும், 80% க்கு மேல் 20 மாணவர்களும் மதிப்பெண்களைப் பெற்றுள்ளனர்.பள்ளியில் முதல் இடம் பிடித்த மாணவர் வருணேஷ் மற்றும் அவரது பெற்றோர்களை பள்ளியின் தாளாளர் சண்முகசாமி, பள்ளி முதல்வர் ஜெயபாரதி ஆகியோர் பொன்னாடை அணிவித்து கௌரவித்தனர். மேலும் பள்ளி துணை முதல்வர் அகல்யா, ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் ஆசிரிய பெருமக்கள் ஆகியோர் வாழ்த்துக்களை தெரிவித்தனர்.



■ மதுரை மேற்கு தொகுதியில் ஜீவா நகர், ஜெய்ஹிந்த்புரம் பகுதியில் ஸ்ரீ வீர காளியம்மன் கோவிலில் சாமி தரிசனம் செய்துவிட்டு அப்பகுதியில் திமுக சார்பில் தேர்தல் பிரச்சாரம், ஜீவா நகர், 3 போஸ்ட் சந்திப்பு, மற்றும் ஜெயந்திபுரம் பகுதியில் வாக்கு சேகரித்தார். " எங்கள் குடும்பம் ஸ்டாலின் பாதுகாப்பில்" நிகழ்வில் மதுரை வடக்கு மாவட்ட செயலாளர் மற்றும் பத்திரப்பதிவு மற்றும் வணிகவரித்துறை அமைச்சர் பி மூர்த்தி அவர்கள் மேற்கு தொகுதியில் வெற்றி வேட்பாளர் ர். ரகுபதி பாலாஜி அவர்களுக்கு பொதுமக்களிடம் உதயசூரியன் சின்னத்தில் வாக்களிக்குமாறு சேகரித்து வந்தார்.



■ மதுரை மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சித் தலைவர் கே.ஜே.பிரவீன்குமார்,தமிழ்நாடு சட்டமன்ற பொதுத் தேர்தல் ரு 2026 நடைபெற உள்ளதை முன்னிட்டுவருகின்ற 18.04.2026 மற்றும் 19.04.2026 ஆகிய தேதிகளில் வெளி மாவட்ட சட்டமன்ற தொகுதியில் வாக்காளர்களாக இருந்து மதுரை மாவட்டத்தில் பணிபுரியும் காவல் துறை அலுவலர்கள் மற்றும் தேர்தல் பணியில் ஈடுபட்டுள்ள இதர துறை அலுவலர்கள் தங்களது அஞ்சல் வாக்கினை பதிவு செய்ய மதுரை அவுட்போஸ்ட் அருகில் உள்ள காமராஜ் பல்கலை கழக கல்லூரியில் மேற்கொள்ளப்பட்டுள்ள முன்னேற்பாடு மற்றும் பாதுகாப்பு பணிகள் குறித்து ஆய்வு செய்து பார்வையிட்டார்.



# "வள்ளியூர் மக்களின் தாகம் தீரும்; தாமிரபரணி நீர் இன்னும் ஒரு மாதத்தில் வீடு தேடி வரும்!" சபாநாயகர் அப்பாவு உறுதி!

வள்ளியூர் ஏப். 18-
ராதாபுரம் சட்டமன்றத் தொகுதி திமுக வேட்பாளர் சபாநாயகர் மு. அப்பாவு, வள்ளியூர் நகர பஞ்சாயத்துக்குட்பட்ட வடலிவிளை, நம்பியான்விளை, அண்ணா நகர் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் உதயசூரியன் சின்னத்திற்கு ஆதரவு திரட்டினார். பிரச்சாரத்தின் போது அவர் நிறைவேற்றியுள்ள திட்டங்களைப் பட்டியலிட்டுப் பேசினார்: குடிநீர் திட்டம்: ₹423 கோடி மதிப்பீட்டில் வள்ளியூர், பணகுடி பகுதிகளுக்குத் தாமிரபரணி குடிநீர் வழங்கும் பணி இன்னும் ஒரு மாதத்தில் நிறைவடைந்து மக்கள் பயன்பாட்டிற்கு வரும்.

மருத்துவ வசதி: ₹31 கோடியில் கட்டப்பட்ட 200 படுக்கை வசதி கொண்ட அரசு மாவட்ட தலைமை மருத்துவமனையால், மக்கள் மேல் சிகிச்சைக்காக நெல்லை அல்லது நாகர்கோவிலுக்குச் செல்ல வேண்டிய சிரமம் நீங்கியுள்ளது.கட்டமைப்பு: ₹12.13 கோடியில் புதிய பேருந்து நிலையம், ₹4.69 கோடியில் கலைஞர் நூற்றாண்டு தினசரி சந்தை மற்றும் ₹52 கோடியில் 504 அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டும் பணி முழுவீச்சில் நடைபெற்று வருகிறது.

ஆன்மீகம்: ₹74 லட்சத்தில் சுப்பிரமணிய சுவாமி கோவில் கும்பாபிஷேகம் மற்றும் ₹65 லட்சத்தில் மீனாட்சி சொக்கநாதர் கோவில் புனரமைப்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

கூட்டணி கட்சிகள் பங்கேற்பு:இந்தத் தீவிரப் பிரச்சாரத்தில் திமுக மாவட்டப் பொறுப்புக் குழு உறுப்பினர் நம்பி, ஆதிபாண்டி, நகரச் செயலாளர் சேதுராமலிங்கம், தேமுதிக விஜிவேலாயுதம், காங்கிரஸ் பொன்பாண்டி, மதிமுக வெள்ளப்பாண்டி மற்றும் இடதுசாரி கட்சிகளின் நிர்வாகிகள் எனப் பெருந்திரளானோர் கலந்து கொண்டனர்.



■ மதுரையில் ஏ.கே.நிறுவன திறப்பு விழாவில் கலந்து கொண்ட அல் அமீன் மேல்நிலைப்பள்ளி தாளாளர் முகமது இதிரிஸ், வழக்கறிஞர் ஹாரிஸ், தலைமை ஆசிரியர் ஷேக்நபி , நிறுவன உரிமையாளர் முகமது இதிரிஸ், உதவித் தலைமையாசிரியர் அல்ஹாஜ் முஹம்மது, ஹக்கீம், முஸ்தாக், முகமது ஹாரிஸ், புலவர் முகைதீன் பிச்சை, ரஹ்மத்துல்லாஹ், ஆபீர். உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.










SAKKRA VIYUGAM owned and published by PAL PANDIAN, printed at SHANLAX PRESS 66, VP COMPLEX, TPK MAIN ROAD, VASANTHA NAGAR, MADURAI-625003,
Published at 70/53 A1, THILAGAR NAGAR 1ST STREET, ANUPPARPALAYAM, TIRUPPUR, TAMIL NADU-641652 Editor: PAL PANDIAN Phone : 88705 00000